
# ஸ்ரீ நாம மஹிமையும் சில ஸத் விஷயங்களும்





ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர்

ஸ்ரீ :

# ஸ்ரீ நாம மஹிமையும் சிலஸத் விஷயங்களும்






ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி மாருதி ட்ரஸ்ட்

ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி – 3.

போன் : 0413 – 2260096

## முன்னுரை :

ஸ்ரீ நரசிம்ம புராணம் ஒரு முக்கியமான ஸ்தோத்திரத்தைத் தந்தருள்கிறது. ஸ்ரீ சனீஸ்வர பகவான் அருளிச்செய்யத ஸ்ரீ நரசிம்ம ஸ்துதி நாம் பார்த்தோம். இந்த நரசிம்ம ஸ்துதி ஸ்ரீ சுக்ராச்சாரியார் இயற்றியது. எம்பெருமானின் வாமன அவதார காலத்தில் மூவடிமண் எம்பெருமானுக்கு தானம் செய்ய மஹாபலிச் சக்ரவர்த்தி முயன்றபோது அசுரகுரு சுக்கிரன் கமண்டலுவின் துவாரத்தை வண்டாக அடைக்கிறார். எம்பெருமான் தர்ப்பை பவித்திரத்தால் துவாரத்தைக் குடைய சுக்கிரன் ஒரு கண்ணை இழக்கிறார். பிறகு இந்த 9 ச்சேலாகங்கள் கொண்ட ஸ்துதியால் ஸ்ரீநரசிம்மனை போற்றிபாட இழந்த கண்ணை மீண்டும் பெறுகிறார். தற்காலத்தில் மக்கள் கண்நோய்களால் பாதிக்கப்படுவது கண்டு சேதனர்களின் நன்மைக்காக அந்த ஸ்துதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது. பக்தர்கள் பயனடைய ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ஹன் அருள்பாலிப்பாராக.



## ஸ்ரீ சுக்கிரன் அருளிய ஸ்ரீநரசிம்ம ஸ்துதி

நமாமி தேவம் விச்வேசம் வாமனம் விஷ்ணுரூபிணம்!
பலிதர்ப்ப ஹரம் சாந்தம் சாச்வதம் புருஷோத்தமம்!! 1.
தீரம் சூரம் மஹாதேவம் சங்கசக்ர கதாதரம்!
விசுத்தம் ஞான ஸம்பன்னம் நமாமி ஹரிமச்யுதம்!! 2.
ஸர்வ சக்திமயம் தேவம் ஸர்வதம் ஸர்வபாவனம்!
அநாதி மஜரம் நித்யம் நமாமி கருடத்வஜம்!! 3.
ஸுராஸீரைர் பக்தி மத்பி: ஸ்துதோ நாராயண ஸதா!
நஜிதம் ச ஹ்ருஷீகேசம் தம் நமாமி ஜகத்குரும்!! 4.
ஸ்ருதி ஸங்கல்ப்ய யத்ரூபம் தியாயந்தி யதய : ஸதா!
ஜ்யோதி ரூப மனௌபம்யம் நரஸிம்ஹம் நமாம்யஹம்!! 5.
நஜாநந்தி பரம் ரூபம் பிரம்மாத்யா தேவகணா:!
யஸ்யாவதார ரூபாணி ஸமர்ச்சந்தி நமாமிதம்!! 6.
ஏதத் ஸமஸ்தம் யேநாதௌ ஸ்ருஷ்டம் துஷ்ட வதாத்புன:!
த்ராதம் யத்ர ஜகல்லீனம் தம் நமாமி ஜநார்தனம்!! 7.
பக்தை ரப்யர்ச்சிதோ யஸ்துநித்யம் பக்தபிரியோ ஹ்ரிய:!
தம் தேவமமலம் திவ்யம் பிரணமாமி ஜகத்பதிம்!! 8.

துல்லபம் சாபி பக்தானாம் ய: பிரயச்சதி தோஷித!
தம் ஸர்வ ஸாக்ஷிணம் விஷ்ணும் பிரணாமாமி ஸநாதனம்!! 9.

இவ்வாறு துதிக்கப்பெற்ற எம் பெருமான் சுக்கிரன் முன் சங்கு சுக்ர கதா தாரியாய் தோன்றி நமது வெண்மையான தூய சங்கால் இடது கண்ணை ஸ்பரிசித்து சுக்கிரனுக்கு மறுபடி கண்பார்வை ஈந்தார்.

**ஸ்ரீ :**

**ஸ்ரீ மதே ராமானுஜயா நம:**

குலம் தரும் செல்வம்தந்திடும்
அடியார்படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

– திருமங்கை ஆழ்வார்



## ஸ்ரீ நாம மஹிமையும் சில ஸத்விஷயங்களும்

இந்த கலிகாலத்தில் கலிகாலுஷ்யங்களுக்கு நடுவில் நாம் எதை செய்து உஜ்ஜீவிப்பது என்கிற பிரமை ஏற்படுகிறது. கலிகாலத்தில் தவம், யஞ்ஞம் போன்ற கடினமான காரியங்களைச் செய்ய வேண்டாம் பகவானுடைய நாம ஸங்கீர்த்தனத்தாலேயே நம்முடைய பாவங்கள் விலகி, ரஜஸ் தமஸ்ஹுகள் தலை சாய்த்து பக்தி அல்லது பிரபத்தி மார்கத்தில் ஈடுபடுத்தி மோக்ஷபர்யத்தமான பலன்களை ஹரிநாம ஸங்கீர்த்தனம் அளித்திடும் என்பது ஆழ்வார்களுடைய திவ்யஹுக்திகளிலிருந்தும், பகவத்ராமாநுஜர், ஸ்ரீமந் நிகமாந்த மாதேசிகன் போன்ற பரமாசார்யர்கருடைய கிரந்தங்களிலிருந்தும் நாம் தெளிகிறோம். உதாரணமாக தேசிக பிரபந்தத்தில் காணும் பாசுரம் கூறுவதை கவனிப்போம்.

அந்தமிலாப் பேரின்பம் அருந்த ஏற்கும்
அடியோமை அறிவுடனே என்றும் காத்து
முந்தைவினை நிரைவழியில் ஒழுகாதெம்மை
முன்னிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து

மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி
வழிப்படுத்தி வான் ஏற்றி அடிமை கொள்ள
தந்தையென நின்ற தனித்திருமால் தாளில்
தலைவைத்தோம் சடகோபன் அருளினாலே.

பவகான் ஸ்ரீமத் நாராயணன் மந்திரங்களையும் அதன் பிரயோகங்களையும் காட்டியருளி நம்மை வழிப்படுத்தி, வானேற்றி அடிமை கொள்ள தந்தையென நிற்கிறார் என்றும் அப்படிப்பட்ட திருமாலின் தாளில் நாம் தலைவைக்கிறோம், பிரபன்ன கூடஸ்த்ரான சடகோபன் அருளினாலே என ஸாதிக்கிறார்.

கலிகாலத்தின் நாமஸங்கீர்த்தனத்தின் பெருமையை காட்டிக் கொடுத்த எம்பெருமான் அவருக்கு இருக்கும் ஆயிரக்கணக்கான திருநாமங்களில் எவை எவையை முக்கியமாக ஜபித்து பாபசமனம் பெறலாம் என்று ஸ்ரீ நரசிம்ம புராணம் 65-ம் அத்தியாயத்தில் தீர்த்தமகிமை, நாமமகிமை என்கிற கட்டத்தில் திருமாலே திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்.

இங்கே காணக்கிடைக்கும் 25ஸ்லோகங்களில் 68 புண்ணிய



ஷேத்திரங்களையும், அங்கு பகவானை காட்டிக் கொடுக்கும் திருநாமங்களையும் காணக்கிடைக்கிறது. இந்த 25 ஸ்லோகங்களயையும் ஒரு நாளைக்கு 3 தடவை சொல்லிக் கொண்டே வந்தால் பாவங்கள் சுத்தமாகக் கழிந்துபோகும் என்றும் தினமும் காலை வேலையில் சொன்னால் துஸ்வபனதோஷங்கள் நீங்கும் என்றும் பாவங்கள் தேய்ந்து நற்பலன்கள் ஏற்படும் என்றும் தெரிகிறது.

அந்தமில்லா பேரின்பமான ஸ்ரீ வைகுண்ட பிராப்தியும் இந்த சரீரம் முடிந்தவுடன் கிடைக்கும். இதற்காக 5 நிமிடம் செலவழித்து தினமும் சொல்ல முடியாதவர்கள் சுக்ல, கிருஷ்ணா பக்ஷ ஏகாதசி, துவாதசி தினங்களிலாவது படித்தும் இதே நற்பயனை அடையலாம் எனத்தெரிகிறது. மகாஜனங்களில் நற்பயனுக்காக இந்த ஸ்தோத்தர ரத்தினம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இதே ஸ்ரீ கோசத்தில் ஸ்ரீ ஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோத்திரம் என்ற அருமையான ஸ்தோத்திரமும் பிரசுரிக்கப்படுகிறது. அபூர்வமான ஸ்ரீ ஹயக்ரீவ துவாதச மந்திரங்களை தன்னுள் அடக்கிய இதை படிக்க ஸ்ரீ பரிமுகனின் பரமானுக்ரஹம் கிட்டும் என்பதில் ஸந்தேகமில்லை. ஸ்ரீ ஹயக்ரீவனனின் கிருபை பெற்றவன் சுத்தமான மனமும் அபாரமான சாஸ்த்ரஞானம் உடையவன் ஆவான். ஸாமானியமான லௌகீக கல்வியைப் பற்றி பேச வேண்டியதில்லை.

மாணவமாணவிகள் இதை படித்து பரீட்சைகளில் அமோகமான வெற்றி பெற்று, எதிர்காலத்தில் தூயமனம் பெற்று வாழ்வாங்கு வாழ்வார் என்பது நிச்சயம். இன்றைய இளைய தலைமுறையினர் நல்ல மனமும், ஸஹ்ருதய எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள் என்பது திண்ணம் பெற்றோர் இதை அவர்களுக்கு எடுத்துக் கூறி நல்வழிப்படுத்தவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

கடைசியில் ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய 'ஸ்ரீ கோவர் தனாஷ்டகம்' உள்ளது. எம்பெருமான் செய்யும் எண்ணற்ற காரியங்களில் 'ரக்ஷணம்' பிரதானம். இதை படிப்பவரை கோவர்த்தனன் எல்லா விதத்திலும் ரஷிப்பான் என்பது திண்ணம்.

**R.S. சாரி**
**விஷ்ணுப்பிரியா சாரி**



## ஸ்ரீ நரசிம்ம புராணம்
## 65-வது அத்தியாயம்
## தீர்த்த மஹமை - நாம மஹிமை

ஸ்ரீ மந்நாராயணன் பிரம்மாவுக்கு உபதேசித்தது.

ஸ்ரீ பகவானுவாச :-

1. ச்ருணுஷ்வாவஹிதோ பிரம்மன் குஹ்ய நாமாநி மேதுனா!
   க்ஷேத்ராணி சைவ குஹ்யானி தவவக்ஷ்யாமி தத்வத!!
2. கோகாமுகே து வாராஹம் மந்தரே மதுஸஸூதனம்!
   அநந்தம் கபிலத்வீபே பிரபாஸே ரவிநந்தனம்!!
3. மால்யோதபானே வைகுண்டம் மஹேந்தரேது நிருபாத்மஜம்!
   ரிஷபே து மஹாவிஷ்ணும் துவாரகாயம் து பூபதிம்!!
4. பாண்டுஸஹ்யே து தேவேசம் வஸூரூடே ஜகத்பதிம்!
   வல்லீவடே மஹாயோகம் சித்ரகூடே நராதிபம்!!
5. நநிமிஷே பீதவாஸம் ச கவாம் நிஷ்க்ரமணே ஹரிம்!
   சாளக்ராமே தபோவாஸம் அசிந்த்யம் கந்தமாதனே!!
6. குப்ஜாகாரே ஹ்ருஷீகேசம் கந்தத்வாரே பயயோதரம்!

கருடத்வஜம் து ஸகலே கோவிந்தம் நாம ஸாயகே!!

7. விருந்தாவனே து கோபாலம் மதுராயாம் ஸ்வயம்புவம்!
கேதாரே மாதவம் விந்த்யாத் வாராணஸ்யாம் து கேசவம்!!

8. பஷ்கரே புஷ்கராக்ஷம் து த்ருஷ்யத்யும்னே ஜயத்வஜம்!
த்ருண பிந்துவனே வீரம் அசோகம் ஸிந்துஸாகரே!!

9. கஸே ரடே மஹா பாஹும் அம்ருதம் தைஜஸே வனே!
விச்வாஸ யூபே விச்வேசம் நரஸிம்ஹம் மஹாவனே!!

10. ஹலாங்கரே ரிபுஹரம் தேவசாலாம் திரிவிக்ரமம்!
புருஷோத்தமம் தசபுரே குப்ஜகே வாமனம் விது!!

11. வித்யாதரம் விதஸ்தாயாம் வாராஹே தரணீதரம்!
தேவதாருவனே குஹ்யம் காவேர்யாம் நாகசாயினம்!!

12. பிரயாகே யோக மூர்த்திம் ச பயோஷ்ண்யாம் ச சுதர்சனம்!
குமாரதீர்த்தே கௌமாரம் லோஹிதே ஹயசீர்ஷகம்!!

13. உஜ்ஜயின்யாம் திரிவிக்ரமம் லிங்ககூடே சதுர்புஜம்!
ஹரிஹரம் து பத்ராயாம் த்ருஷ்டவா பாபாத் பிரமுச்யதே!!



14. விச்வரூபம் குருக்ஷேத்ரே மணிகுண்டே ஹலாயுதம்!
லோகநாதம் அயோத் யாயாம் குண்டினே குண்டினேச்வரம்!!

15. பண்டாரே வாஸுதேவம் து சக்ரதீர்த்த ஸுதர்சனம்!
ஆட்யே விஷ்ணு பதம் வித்யாத் சூகரே சூகரம் விது:!!

16. பிரம்மேசம் மானஸே தீர்த்தே தண்டகே சியாமளம் விது!
திரிகூடே நாகமோக்ஷம் ச மேருபிருஷ்டே ச பாஸ்கரம்!!

17. விரஜம் பஷ்பபத்ராயம் பாலம் கேரளகே விது:!
யசஸ்கரம் விபாசாயம் மாஹிஷ்மத்யாம் ஹுதாசனம்!!

18. க்ஷீராப்தௌ பத்மநாபம் து விமலே து ஸனாதனம்!
சிவநத்யாம் சிவகரம் கயாயாம் ச கதாதரம்!!

19. ஸர்வத்ர பரமாத்மானம் ய பச்யந்தி ச முச்யதே!
அஷ்டஷஷ்டிஸ்ச நாமாநி கதிதானி மயா தவ!!

20. க்ஷேத்ராணி சைவ குஹ்யானி கதிதானி விசேஷத!
ஏதானி மம நாமானி ரஹஸ்யானி பிரஜாபதே!!

21. ய:படேத் பிராதருத்தாய ச்ருணுயாத்வாபி நித்யச:!
கவாம் சத ஸஹஸ்ரஸ்ய தத்தஸ்ய பலமாப்னுயாத்!!

22. தினேதினே ஸ^6சிர்பூத்வா நாமான்யேதானி ய: படேத்!
து:ஸ்வப்னம் நபவேத் தஸ்யமத் பிரஸாதாத் நசம்சய!!
23. அஷ்டஷஷ்டிஸ்து நாமாநி திரிகாலம் ய: படேந்தர:!
விமுக்த ஸர்வபாபேப்யோ மமலோகே ஸமோததே!!
24. த்ரஷ்டவ்யானி யதாசக்த்யா க்ஷேத்ராண்யேதானி மானவை!
வைஷ்ணவைஸ்து விசேஷேண தேஷாம் முக்திம் ததாம்யஹம்!!
25. ஸ^6தஉவாச

ஹரம் ஸமப்யர்ச்ய தத்க்ரஸம்ஸ்திதோ
ஹரிஸ்மரந் விஷ்ணுதினே விசேஷத:!
இமம் ஸ்தவம் ய: படதே ஸமானவ:
பிராப்னோதி விஷ்ணோர் அமிருதாத்மகம் பதம்
( விஷ்ணுதினே என்பது ஏகாதசி துவாதசி தினங்கள்)



## ஸ்ரீ ஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோதரம்

1. அத கல்பம் ப்ரவக்ஷ்யாமி ஹயக்ரீவஸ்ய பஞ்ஜரம்
யஸ்ய விஜ்ஞாந மாத்ரேண வாணீ கங்கேவ நிஸ்ஸரேத்
2. சுத்த ஸ்படிகஸங்காசம் துஷாராசல ஸந்நிபம்
ச்வேத பர்வத ஸங்காச சந்த்ர மண்டல மத்யகம்
3. சதுர்புஜ முதாராங்கம் புண்டரீகாயதேக்ஷணம்
சங்கசக்ரதரம் தேவம் கிரீட மகுடோஜ்வலம்
4. கௌஸ்துபோத்பாஸிதோரஸ்கம் வநமாலாவிராஜிதம்
பீதாம்பர தரம் தேவம் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸம்
5. முக்ய ஹஸ்தத்வயேநைவ ஜ்ஞாநமுத்ராக்ஷ புஸ்தகம்
தாரயந்தம் ஹயக்ரீவம் த்யாயேதிஷ்டார்த்த ஸித்தயே
6. ஓங்காரோத்கீதரூபாய ருக்யஜுஸ்ஸாம மூர்த்தயே
நமோஸ்து தேவதேவாய வாஞ்சிதார்த்த பிரதாயிநே
7. அஜ்ஞாந திமிரம் சிந்தி ஜ்ஞாநம் சாசு ப்ராயச்ச மே
தேஹிமே தேவதேவச ஹயசீர்ஷ நமோஸ்து தே

8. பூதப்ரேத பிசாசாதீந்சிந்தி தேவ ஜ்நார்தந
ஜ்வராதீன் நிகிலாந் ரோகாந்த நாசயாசு ரமாபதே
9. தாரித்ர்யம் ஸகலம் சிந்தி குரு ஸௌபாக்ய பாஜநம்
சத்ருந் நாசய மே தேவ ஹயசீர்ஷ நமோஸ்து தே
10. மேதாம் ப்ரஜ்ஞாம் பலம் வித்யாம் ஸம்பதம் புத்ர பௌத்ரகம்
தேஹி மே தேவ தேவேச ஹயசீர்ஷ நமோஸ்து தே
11. கார்க்கோடக முகாந்த ஸர்ப்பாந் விஷாதீந் விலயம் நய
அம்ருதம் குரு மே தேவ ஹயசீர்ஷ நமோஸ்து தே
12. ஸ்த்சீரவ்சயம் ஜநவச்யம் ச ராஜவச்யம் பராத்பரம்!
குரு தேவாங்கநாப்ருந்த ஸேவ்யமாந பதாம்புஜ்!!
13. ஹம்ஸாய பரமேசாய சந்த்ரமண்டல வாஸிநே!
நமோ ஹயோத்தமாங்காய வாஞ்சிதார்த்த ப்ரதாயிதே!!
14. ருக் யஜுஸ்ஸாம ரூபாய ருதாய மஹதே நம:!
ருக்ஷேச பிந்து மத்யஸ்த ராஜீவாஸந பாஜிநே!!
15. வேத வேதாந்த வேத்யாய வேதாஹரண கர்மணே!
ஸத்வா ஸத்வ மஹா மோஹ பேதிநே ப்ரஹ்மணே நம:!!



16. ப்ரஜ்ஞாந தாயிநே நித்யம் பஜதாம் பாவிதாத்மநாம்!
ப்ரணவோத்கீதவபுஷே ப்ரணதிம் ப்ரதிபாதயே!!
17. மந்தாரகுந்தஸ்படிகமஹநீயோரு வர்ச்சஸே
மநீஷாப்ரத தேவாய மஹாச்வ சிரஸே நம
18. இதி த்வாதச மந்த்ரேண நமஸ் குர்யாத் ஜநார்தநம்
ப்ராத: ப்ரஸந்நவதநம் பூர்வாசார்யாபிவந்திதம்
இதி ஸ்ரீ ஹயக்ரீவ பஞ்ஜர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

## கோவர்த்தனாஷ்டகம்

1. குணா தீதம் பரப்ரஹ்ம வ்யாபகம் புவநேச் வரம்!
கோகுலா நந்த தாதாரம் வந்தே கோவர்த்தனம் கிரிம்
2. கோலே காதிபதிம் க்ருஷ்ண விக்ரஹம் பரமேச் வரம்
சதுஷ்பதுார்த் தனம் நித்யம் வந்தே கோவர்த்னம் கிரிம்
3. நரஜன்ம க்ருதம்பாபம் தஹேத்தூலம் ஹுதாசன:
க்ருஷ்ணபக்தி ப்ரதம் சச் வத் வந்தே கோவர்த்தனம் கிரிம்

4. ஸத்ர நப்தம் ஸதாவந்த்யம் ஸதா ஸ்ர்வாத்த ஸாதனம்
ஸாக்ஷிணம் ஸர்வபூதானம் வந்தே கோவர்த்தநம் கிரிம்

5. ஸ்ரூபம் ஸ்வஸ்திகாஸீனம் ஸ்நாஸாக்ரம் க்ருதேக்ஷணம்
த்யாயந்தம் க்ருஷ்ண க்ருஷ்ணேதி வந்தே கோவர்த்தனம் கிரிம்

6. விச் வரூபம் வ்ரஜாதீசம் வல்லவீ வல்லவப்ரியம்
விஹ்வல ப்ரிய மாத்மானம் வந்தே கோவர்த்தனம் கிரிம்

7. ஆனந்தக்ருத் ஸ்ராசீச க்ருதஸம்பார போஜனம்
மஹேந்த்ர மதஹரம்தாரம் வந்தே கோவர்த்தனம் கிரிம்

8. க்ருஷ்ணலீலாரஸாவிஷ்டம் க்ருஷ்ணமாத்மானம் க்ருபாகரம்!
க்ருஷ்ணாநந்த ப்ரதம் ஸாக்ஷாத் வந்தே கோவர்த்தனம் கிரிம்!!


9. கோவர்த்தனாஷ்ட கமிதம் ய: படேத் பக்தி ஸம்யுத!
தந்நேத்ர கோசரோ யாதி க்ருஷ்ணகோவர்த்தநேச் வர:!!

*****





# ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ஸ்ரீராம்



வர்மா, போன் : 0413-4207377